**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்.**
**முன்னிலை :– திரு.S.அன்புதாசன், பி,காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்.**
**2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 3ம் நாள் திங்கள்கிழமை**
**IA.No.2/2025 in OS.No.9/2025**

திவாகர் .... மனுதார்/பிரதிவாதி

/ எ தி ர் /

சிவகாந்தன் .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்னர் இன்று(03.11.2025) இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதார்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. P.சரவணன், திரு. M.மதன்குமார் ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அழைத்தும் ஆஜராகததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும் :

**<u>உ த் த ர வு</u>**

அசல் வழக்கு 09/2025–ல் 11.08.2025ம் தேதியில் மனுதார்/பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்யக்கோரி உவிமுச கட்டளை 9 விதி 7–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதார்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தின் மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u>** :–

1. மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கு மனுதாரருக்கு எதிராக நிரந்தரதடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
2. மேற்படி வழக்கானது மனுதாரர் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய கடந்த 11.08.2025 –தேதி வாய்த்த ஏற்ப்பட்டிருந்த நிலையில், மனுதாரருக்கு கடுமையான காய்ச்சல் மற்றும் சளி காரணமாக நாட்டு வைத்தியம் பார்த்து கொண்டிருந்ததால், வழக்கறிஞரை தொடர்புகொள்ள முடியவில்லை நீதிமன்றத்திற்கும் ஆஜராக இயலவில்லை. எனவே, 11.08.2025 தேதி மனுதாரர் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாதது வேண்டுமென்று ஏற்பட்டதல்ல. ஆகையால், கடந்த 11.08.2025 தேதியில் மனுதாரருக்கெதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்திரவை மேற்படி காரணங்களினால் ரத்து செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளனர்.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) <u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>

அசல் வழக்கில் இம்மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், எனவே,

கடந்த 11.08.2025 ஆம் தேதி மனுதாரர்க்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை ரத்து செய்யக் கோரியுள்ள நிலையில், இம்மனுவுடன் எதிர் மனுஉரை தாக்கல் செய்யப்பட்டதாலும், தரப்பினருக்கு போதிய வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதால் இம்மனுவை அனுமதிப்பது தான் நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதித்து கடந்த 11.08.2025ம் தேதியில் மனுதாரர்க்கு எதிராக இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, 2025 ம் நாளன்று நவம்பர் திங்கள் 3–ம் நாளாகிய இன்று திறந்த அவையில் அவையறியப் பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2025.11.04 10:38:14 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்**
**ஆத்தூர்**